கோவிட்-19 தொற்றுக்கள் அதிகரித்து வருவதால், புதிதாக கிடைக்கக்கூடிய தடுப்பூசி விநியோகம் தொடர்பான கேள்விகளும் அதிகரித்து வருகின்றன.

**CASSA** எனப்படும் தென்னாசியர்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களின் முகவர் சபையின் Covid-19 தடுப்பூசி தொடர்பான கல்வித் தொடர் அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வதந்தி 1: COVID-19 நோயின் கடுமையான சிக்கல்கள் எனக்கு ஏற்படும் அபாயம் இல்லை, அதனால் எனக்கு தடுப்பூசி தேவையில்லை.

உண்மை - உங்களுக்கு அபாயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்களுக்கு இன்னும் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது, அதை நீங்கள் மற்றவர்களுக்கு பரப்பும் வாய்ப்பும் உள்ளது எனவே தடுப்பூசி போடுவது முக்கியம் ஆகும். தடுப்பூசி பரவலாகக் கிடைத்தவுடன், முடிந்தவரை தகுதியுள்ள அனைத்துப் பெரியவர்களும் தடுப்பூசியைப் பெற பரிந்துரைக்கப்படுகிறது. இது உங்களை மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்காகும்.

வதந்தி 2: நீங்கள் தடுப்பூசியின் இரண்டாவது மருந்தளவை எடுக்க தேவையில்லை.

உண்மை - நீங்கள் எடுக்க வேண்டும், கோவிட் 19 க்கு எதிரான வலுவான நோயெதிர்ப்பு திறன் மற்றும் பாதுகாப்பை அடைய இரண்டு மருந்தளவுகளும் தேவை என்பதை மருத்துவ ஆய்வுகளின் தரவு காட்டுகிறது.

வதந்தி 3: தடுப்பூசி எனக்கு நீண்ட கால பக்க விளைவுகளை தரலாம்.
உண்மை - அதில் உண்மை இல்லை. பக்க விளைவுகள் ஏதேனும் இருந்தால் அவற்றில் பெரும்பாலானவை வழக்கமாக தடுப்பூசியைப் பெற்ற சில நாட்களுக்குள் பொதுவாகக் காணப்பட்டு எந்தவொரு பிரச்சனையும் இல்லாமல் தீர்க்கப்படுகின்றன. (எடுத்துக்காட்டாக ஒரு ஒவ்வாமை எதிர்வினை) காணப்படும் சில பக்க விளைவுகள் (காய்ச்சல், குளிர்காய்ச்சல், தசைவலி போன்றவை) ஒரு நபரின் நோயெதிர்ப்பு திறனின் காரணமாக ஏற்படுகின்றன. தடுப்பூசி பெற்ற பிறகு இது இயல்பானது. 3 நாட்களுக்கு மேல் நீடிக்கும் பக்க விளைவுகள் உங்கள் சுகாதார வழங்குநரிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

வதந்தி 4: ஏற்கனவே கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தடுப்பூசியைப் பெற வேண்டியதில்லை

உண்மை - இது உண்மையல்ல. ஏற்கனவே கோவிட் நோயால் பாதிக்கப்பட்டவர்களும் தடுப்பூசியைப் பெறுவது பரிந்துரைக்கப்படுகிறது. சிலருக்கு அந்த நோய் வந்திருந்தது கூட தெரியாமலிருக்கலாம். அத்தோடு தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது என்றும் அறியப்படுகிறது, நீங்கள் குணமடைந்தவுடன் உங்களிடமிருந்து தொற்று பரவாது என்ற நிலையில் உங்களது தனிமைப்படுத்தல் காலம் முடிந்ததும் நீங்கள் தடுப்பூசியைப் பெறலாம்.

கோவிட்-19 தடுப்பூசி பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா?

இது தொடர்பாக அறிந்து கொள்ள **CASSA** வின் Covid-19 தடுப்பூசி தொடர்பான கல்வித் தொடரில் apnahealth.org என்ற இணையதள முகவரியை பார்வையிடவும்.

வழங்கப்பட்ட தகவல்கள் ஒன்டாரியோ பொது சுகாதார பிரிவின் தகவல்கள் அடிப்படையில் பெறப்பட்டவை.